# காலை முரசு

பக்கங்கள் 23

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | ஐப்பசி 05 | ஞாயிற்றுக்கிழமை | 22.10.2023 | அதிர்வு 82


## திருமலை விபத்தில் இளைஞர் ஒருவர் பலி

(அப்துல்சலாம் யாசீம்)


திருகோணமலை – குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சலப்பையாறு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 04



# அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் ஐ.தே.க. மாநாட்டில் ரணில் சத்தியம்

## நாடாளுமன்றத் தேர்தலும் நடக்குமாம் 2025 இல் மாகாண சபைத் தேர்தலாம்

“இலங்கையை ஸ்மார்ட் நாடாக கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதே எனது நோக்கம். நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தியதன் பின்னர் அரசமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு 2025 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.” 04



## ஐ.தே.க. தலைமையில் 2024 இல் புதிய ஆட்சி

### கட்சியின் விசேட மாநாட்டில் உறுதி

2024 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஆட்சியே அமையும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். 04



## யாழில் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்வில் மௌன அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று நடைபெற்ற தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் 02






காஸா மக்கள் மீதான இனப்படுகொலையைக் கண்டித்து, பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் வகையில், யாழ் நகரில் நேற்றுப் பகல் ஒரு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 04

# மின் கட்டண உயர்வுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்

## மின் பாவனையாளர்கள் சங்கம் தயாராகிறது

மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என மின் பாவனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கிய அனுமதி சட்டவிரோதமானது என அந்தச் சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக சுட்டிக்காட்டியுள்ளார்.

வருடமொன்றுக்கு மூன்று தடவைகள் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை சட்டத்தில் இடமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை முன்வைத்த 04 காரணங்களும் பொய்யானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் முதல் மின் கட்டணத்தை அதிகரிக்க பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய, 18 வீதத்தில் இருந்து 20 வீதம் வரையான மின் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# ஹப்புத்தளை - பெரகல பிரதான வீதியில் மண்மேடு சரிவு; போக்குவரத்துப் பாதிப்பு!





ஹப்புத்தளை – பெரகல பிரதான வீதியின் விகாரகல பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் பெய்த மழை காரணமாக வீதி வெள்ளத்தில் மூழ்கியது.

இதனால் இந்த வீதியூடனான போக்குவரத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

ஹல்துமுல்லை பொலிஸார், பிரதேச மக்கள் இணைந்து மண்மேட்டை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பண்டாரவளை, எல்ல பகுதிகளில் நேற்று மாலை முதல் பலத்த மழை பெய்துள்ளது.

இதேவேளை, பதுலுஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. தெமோதர நீர்த்தேக்கத்தின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

மழையினால் ஹாலிஎல – உடுவர பகுதியிலுள்ள பல கிராமங்களுக்கு செல்லும் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மகாவலி கங்கையின் ஆற்றுப்படுக்கையில் நேற்று காலை முதல் பெய்த மழையினால் பொல்கொல்ல மகாவலி அணையின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

---

### இசை நிகழ்வில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் நடத்தப்பட்ட படுகொலையை மறைக்கவே அதே நாளில் இசை நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது எனச் சர்ச்சைகள் எழுந்த நிலையில் இசை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது, “கலையும் கலாசாரமும் சிறந்து ஓங்கும் இந்த யாழ். மண்ணில் யாழ்கானம் என்ற இந்த இசை நிகழ்ச்சியை அளிப்பதில் சந்தோஷ் நாராயணனும் அவர் குழுவினரும் பெரு மகிழ்ச்சி கொள்கின்றனர். இம்மண்ணும் இம்மண்ணில் வாழும் மக்களும் கண்ட துயர்கள் அநேகம். ஒரு வருடத்தின் 365 நாட்களில்



எந்தத் திகதியையும் எடுத்து வரலாற்று ஏடுகளைப் பின்னோக் கிப் புரட்டினாலும் அத்திகதியில் ஒரு கொடூர சம்பவம் – ஒரு துயர்மிகு சம்பவம் நிகழ்ந் திருக்கும்.

ஏன், இன்றும் இத்திகதியில் சரியாக 36 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடந்த கொடூரமான நிகழ்வை நாம் துயருடன் நினைவு கூர்ந்து கொண்டிருக்கின்றோம். கலை நிகழ்ச்சிகள் உள்ளத் துயர்களை நீக்கும் மருந்தாவன. அதனால் சந்தோஷ் நாராயணனும் அவரது குழுவும் இந்த இசை விருந்தை ஒரு இசை மருந்தாகவே மக்களுக்கு வழங்குகின்றனர்.

ஆதலால் பலதசாப்தங்களாக நடந்த கொடிய யுத்தத்தில் மறைந்த எம் நாட்டு மக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்திவிட்டு இம்மருந்தை அருந்துவதே பொருத்தமானதாய் இருக்கும்.

இயலுமானவர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகிறோம்.” – என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து அனைவரும் எழுந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியை உயிரிழந்தவர்களுக்குச் செலுத்தினர்.

# 24 மணி நேரத்தில் வலுவடையும் தாழமுக்கம்: மீனவர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்

வங்காள விரிகுடாவில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையும் சாத்தியம் நிலவுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன் காரணமாக இந்தக் கடற்பிராந்தியங்களில் மீன்பிடி, கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

ஊவா, சப்ரகமுவ, கிழக்கு மாகாணங்களிலும் இரத்தினபுரி மாவட்டத்திலும் 75 மில்லிமீட்டருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் மழை பெய்யக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக காற்றின் வேகம் அதிகரிக்கலாம் எனவும், இதன் போது மின்னல் தாக்கங்களும் ஏற்படலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானமாக செயற்பட வேண்டுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களுக்கான வைப்புத்தொகையை அதிகரிக்க தீர்மானம்!

ஜனாதிபதி தேர்தலுக்காக போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வைப்புப் பணத்தொகையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு 50 ஆயிரம் ரூபாய் என்ற வைப்புத் தொகையை 26 லட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனையொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளருக்கான வைப்புத் தொகையை 75 ஆயிரம் ரூபாயிலிருந்து 31 லட்சம் ரூபாயாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் வைப்புச் செய்யக் கூடிய தொகையில் 25 லட்சம் ரூபாயை திரும்பப் பெறக் கூடிய தொகையாகவும், எஞ்சிய ஒரு லட்சம் ரூபாயை திருப்பிச் செலுத்த முடியாத வைப்புத் தொகையாகவும் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுயேச்சை வேட்பாளரின் வைப்புத் தொகையில், 30 லட்சத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசா யுத்தத்தால் சர்வதேச சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை உயர்வு!

காசா பகுதியில் நிலவும் மோதல் காரணமாக சர்வதேச சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையிலும் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு எரிவாயு நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன என எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 500 ரூபாவால் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் நிலவுகிறது.

இறுதியாக கடந்த 5ஆம் திகதி எரிவாயு விலை திருத்தப்பட்டது.

இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 343 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு தற்போது 3 ஆயிரத்து 470 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன் 12.5 கிலோகிராம் நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயு தற்போது 3 ஆயிரத்து 985 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

# 2024 ஆம் ஆண்டு முதல் தினசரி எரிபொருள் விலையில் திருத்தம்

தற்போது முன்னெடுக்கப்படும் மாதாந்த விலைத் திருத்தத்திற்கு பதிலாக, அடுத்த வருடம் முதல் நாளாந்தம் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இதனை குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது இயங்கி வரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், எரிபொருள் விநியோக நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அடுத்த வருடம்....

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி யின் விசேட மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

'ஸ்மார்ட் நாடு – 2048ஐ வெல்வோம்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய் யப்பட்ட இந்த மாநாட்டில், திருத்தப்பட்ட கட்சியின் புதிய யாப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஒன்லைன் மூலம் அமைப்புக்களை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு சந்தர்ப்பம் வழங்கி கட்சியை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் நாட்டுக்கு முன், ஐக்கிய தேசி யக் கட்சி ஸ்மார்ட் கட்சியாகக் கட்டியெழுப் பப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

"என்னில் இருந்து ஆரம்பிப்போம்" என்ற குறியீட்டை அமைச்சர் மனுஷ நாண யக்கார ஜனாதிபதிக்கு அணிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோக பூர்வ பத்திரிகையான 'சிய ரத'வின் பழைய இதழ் ஒன்று அதன் ஸ்தாபகரான திருமதி மாயா களுபோவிலவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக் கப்பட்டது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க,

"ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப சகல துறைகளிலும் ஊழலை ஒழிக்க வேண் டும். அதற்காக அரச நிறுவனங்களிலும் அரசியல் கட்சிகளிலும் ஊழலைக் கட்டுப் படுத்த பல கட்டளைச் சட்டங்கள் கொண்டு வரப்படும்.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி பலமடைய வேண் டும். எதிர்காலத்தில் நாட்டுக்காகப் பரந்த பங்களிப்பை வழங்குவதற்கு ஸ்மார்ட் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி முன்வர வேண்டும்." – என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டுக்கு மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் பலரும் வாழ்த்துத் தெரிவித்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் முன்னாள் இராஜாங்க அமைச் சர் ருவன் விஜேவர்த்தன, தவிசாளர் வஜிர அபேவர்த்தன எம்.பி., தேசிய அமைப் பாளர் சாகல ரத்நாயக்க, பொதுச்செயலா ளர் பாலித ரங்கே பண்டார, உப தலைவர் சட்டத்தரணி அகிலவிராஜ் காரியவசம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோ ரும் மாநாட்டில் உரையாற்றினர்.

பௌத்த பிக்குகள் தலைமையிலான மதகுருமார்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட பிரமுகர்கள் மற்றும் நாட்டின் ஒவ்வொரு மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான கட்சி உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

## ஐ.தே.க....

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கட்சிக்கு, நாட்டுக்கு தற்போது 'ஸ்மார்ட்' தலைவர் ஒருவர் இருக்கின்றார். அவரை உலகம் ஏற்கின்றது. தூர நோக்கு சிந்தனை அவரிடம் இருக்கின்றது. எனவே, நாட்டில் எல்லாத் துறைகளும் நவீனமயப்படுத்தப்படும். அந்தவகையில் எமது நாடு 'ஸ்மார்ட்' நாடாக மாறும்." – என்றார்.

## திருமலை....

இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேவேளை, மற்றுமொரு நபர் படு காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

படுகாயமடைந்த நபர் வீதியோரத்தில் உட்கார்ந்திருந்திருந்தபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த 17 வய துடைய இளைஞர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

அந்த இளைஞரின் சடலம் குச்சவெளி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது.குச்சவெளி – நாவல்சோலை பகுதியைச் சேர்ந்த இளைஞரே உயிரி ழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த நபர் (வீதி யில் இருந்த நபர்) குச்சவெளி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காகத் திருகோண மலை பொது வைத்தியசாலைக்கு மாற் றப்பட் டுள்ளார்.விபத்து தொடர்பான விசார ணைகளை குச்சவெளி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## இரகசியம்....

சமூக நீதிக்கான வெகுஜன அமைப் பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத் தப்பட்டது. அதில் பங்கு பற்றியிருக்க வேண்டிய நமது அரசியல்வாதிகள் பல ரும் அங்கு மிஸ்ஸிங்.

சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா, அருந்த வபாலன், ஐங்கரநேசன் என்று சொற்ப அரசியல் பிரமுகர்களே அங்கு காணப் பட்டனர். முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலரும் அந்தப் பக்கம் தலை காட்ட வில்லை. எஜமான் விசுவாசம் காரணமாக இருக்க கூடும்.

அப்படி சந்தேகம் வலுத்தமைக்குக் காரணங்கள் உண்டு. எடுத்ததற்கு எல் லாம் 'அறிக்கை வாள்' வீசுபவர்கள் நமது அரசியல் தலைவர்கள். அவ்வப்போது அறிக்கைகள் வெளியிட்டுத் தங்கள் அரசியல் இருப்பைக் காட்டிக் கொள்ப வர்கள் அவர்கள்.

ஆனால் பாலஸ்தீனம் மீதான இஸ்ரே லின் தாக்குதலைக் கண்டிக்கும் விடயத் தில் அவர்கள் ஏனோ தந்திரமாகக் கள்ள மௌனம் பேணுகின்றார்கள். ஏன் என்று தேடிப் பார்த்தேன். காரணம் புரிந்தது. இலங்கைத் தமிழர்கள் தமது சுதந்திரத் திற்கான போராட்டத்தை ஆயுத வழிக்குத் திருப்பிய போது, இரண்டு வெளிச் சக்தி களிடம் இருந்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் கிட்டின.

ஒன்று – லெபனான், பாலஸ்தீனத் தரப்புகளின் பயிற்சி.

அடுத்தது – உத்தரப் பிரதேசத்திலும், பிற இடங்களிலும் இந்தியா வழங்கிய பயிற்சி.

இரண்டாவது முறைமையின் கீழ்தான் அதிக எண்ணிக்கையானோர் பயிற்சி பெற்றனர். ஆயினும் முதல் முறைமை யின் கீழேயே மூத்த போராளித் தலைவர் கள் வலிமையான பயிற்சியைப் பெற்றனர் என்பது நீண்ட காலமாகப் பேசப்பட்டு வரும் விடயம். அந்த முதல் முறைமையின் கீழ் பயிற்சி பெற்ற மூத்த போராளிகளே பல இயக்கங்களினதும் தளபதிகள் மற்றும் தலைவர்களாக உயர்ந்தனர்.

இந்த இரண்டு தரப்புகளிடமிருந்தும் பயிற்சி கிட்டிய போதிலும், அத்தகைய பயிற்சிகளை அத்தரப்புகள் நம் தமிழ்ப் போராளிகளுக்குத் தந்தமையின் நோக் கத்தில் வித்தியாசம் உண்டு.

கொழும்பைத் தன் காலடியில் வீழ்த்தித் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரச் செய்யும் சுய அரசியல் லாபத்துக்காகவே இந்தியா அத்தகைய பயிற்சிகளை வழங் கியது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

ஆனால், பலஸ்தீனத்திலும் லெபனா னிலும் நமது மூத்த தளபதிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டமைக்கான நோக்கம் வேறு. ஒரு சகோதர விடுதலை அமைப்பு என்ற முறையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை மதித்து, கௌரவித்து அந்தப் பயிற்சிகள் வழங் கப்பட்டன.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவா னந்தா, ஈ.பி.ஆர்.எல். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்ற பலர் அவ்வாறு மத்திய கிழக்கில் பயிற்சி பெற் றனர். புளொட் பிரமுகர்கள் சிலரும் கூட இதில் அடக்கம். ஆனால் அத்தகைய உயர் கருத்தியலில் தமிழ்ப் போராளிக ளுக்கு அன்று ஆயுதப் பயிற்சிகளை முறையாக வழங்கிய அந்த விடுதலை அமைப்புக்கு, அது இப்போது இத்தகைய துன்பியல் கட்டத்தை அனுபவித்து, நெருக்கடியை எதிர் கொள்ளும் நேரத்தின் போது கூட தமது ஆதரவை – ஒற்றுமையை – வெளிப்படுத்த அப்படிப் பயிற்சி பெற்ற தலைவர்கள் கூட முன் வரவில்லை.

அமைச்சர் டக்லஸ் மாத்திரம் தமது நன்றியுணர்வை வெளிப்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்.

ஆனால் மற்றைய தலைவர்கள் கள்ள மௌனம் பேணிப் பம்முகுகின்றனர். அதற்குக் காரணம் உண்டு. இப்போது பலஸ்தீனியர்களுக்கு ஆதரவு வெளியிட் டால், அந்தப் பிணக்குத் தொடர்பான விடயத்தில் பகிரங்கமாக இஸ்ரேலுடன் நிலை எடுத்திருக்கும் பாரதத்தை, அது நெருடச் செய்துவிடும். அதனைத் தவிர்த் துக் கொள்வோம் என்ற முன்னெச்சரிக் கைதான் அவர்களின் நன்றி உணர்வை யும் மழுங்கடிக்கச் செய்திருக்கின்றது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய் வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"






# காசா மக்கள் மீதான இனப்படுகொலையை நாம் சகலரும் ஒன்றிணைந்து எதிர்ப்போம்!

## யாழில் கவனவீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

"காசா மக்கள் மீதான இனப்படு கொலையை எதிர்ப்போம் ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக ஒன்றி ணைவோம்" – எனும் தொனிப்பொருளில் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவுக் குரல் கொடுக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப் பின் ஏற்பாட்டில் நேற்று யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பால் பலஸ்தீன மக்கள் மேற்கு கரையிலும் காசாவிலும் சுருக்கப் பட்டுள்ளனர். இஸ்ரேல் அரசினதும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளின



தும் அரசியல் பொருளாதார நலன்களுக் காக காசா மக்கள் பலியாக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக குழந்தைகளும், பெண் களும் அதிகமாகக் கொல்லப்பட்டுள் ளனர். இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூர தாக்குதலைக் கண்டிக்கின்றோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்பினர், சிவில் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அபத்த அறிவிப்பு

அரசமைப்பின் பிரகாரம் நாட்டில் தேர்தல் நடைபெறும் என்று நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட பொதுக்கூட்டத்தில் அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அரசமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு, 2025 முதல் காலாண்டில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நாட்டின் தேர்தல் விவகாரத்தை தனது விளையாட்டுச் சீட்டாக மாற்றியிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவற்றை அரசமைப்புப் பிரகாரம் தாம் நடத்துவார் என்று குறிப்பிட்டு வெளியிடும் கருத்துக்கள் ஏளனத்துக்குரியவை.

நாட்டின் உள்ளூராட்சித் தேர்தல்கள் அரசமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம்தான் இவ்வாண்டு ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டன. அரசமைப்பு ஏற்பாடுகளின்படிதான் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் வரை அந்த விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், நிதி அமைச்சராகவும் பதவி வகிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் மூலம் அந்தத் தேர்தலுக்கான நிதியை வழங்காமல் வெட்டி, அத்தேர்தல்களுக்கு ஆப்படித்திருக்கின்றார். அரசமைப்புப்படி நடத்த வேண்டிய தேர்தலை, குறுக்கு வழியில் - தொழில்நுட்ப முறையில் - தடுத்துக் குழப்பி விட்டு, அடுத்து மற்றைய தேர்தல்கள் பற்றிய அறிவிப்பை வெளியிட அவர் முன் வந்திருப்பது ஆச்சரியமானது.

அவரது அறிவிப்பின்படி, அடுத்த ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும். ஆம், அது சரிதான். அவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அடுத்த வருடம் ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் அது நடைபெற்றேயாக வேண்டும். உள்ளூராட்சி தேர்தல்களை தடுத்த மாதிரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அத்தேர்தலை நடத்த விடாமல் குறுக்கே புகுந்து, குசும்பு பண்ணிக் குழப்பாவிட்டால் அது அடுத்த வருடம் ஒக்டோபருக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். அதைத் தடுக்கக்கூடிய வல்லமை - தந்திரம் - ரணிலுக்கு வாய்க்கப் போவதில்லை என்பதே பொதுவான அபிப்பிராயம்.

ஆனால், அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலைத் தாம் நடத்துவார் என்ற பாணியில் அவர் இப்போது கூறுவது அபத்தம். ஏனென்றால் தற்போதைய ஜனாதிபதிப் பதவியில் அவர் இருக்கும் கடைசி நாள் வரை நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அவரிடம் இருக்கும். ஆனால், அந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அவர் தொடர்ந்து பதவியில் இருந்தால் மட்டுமே, அதன் பின்னர் நாடாளுமன்றத்தை முற்கூட்டிய கலைத்து தேர்தல் நடத்தவும் , 2025 முதல் காலாண்டில் மாகாண சபை தேர்தலை நடத்தத் திட்டமிட்டு காரியங்களை முன்னெடுக்கவும் அவருக்கு முடியுமாக இருக்கும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவர் வெல்வது என்பது அசாத்தியமானது என்ற நிலைமை உருவாகி வரும் சூழலில், அத்தேர்தலுக்குப் பின்னர் பொது தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல் குறித்து எல்லாம் அவர் முடிவு செய்து நடவடிக்கை எடுப்பார் என்பது போல இப்போது பீற்றுவது வெறும் அபத்தம்தான்.

## தாய் வீடு திரும்புங்கள்!

### கட்சியை விட்டு வெளியேறியோருக்கு ஐ.தே.க. விசேட மாநாட்டில் ரவி அழைப்பு



ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறியோர் மீண்டும் தாய் வீடு திரும்ப வேண்டும் என்று அக்கட்சியின் உப தலைவரான ரவி கருணாநாயக்க அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் வரவேற்புரை நிகழ்த்துகையிலேயே ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையக் காத்திருக்கும் இளைஞர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

"நாடு தொடர்பில் சிந்தித்து முக்கியமான முடிவுகளை எடுக்கப்போய்தான் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவைச் சந்தித்தது. ஆனால், ஐ.தே.கவின் முடிவுகள் சரி என்பதை மக்கள் இன்று ஏற்றுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவால்தான் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்" – என்றும் ரவி கருணாநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

## இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து; 2 பேர் சாவு!

### மேலுமொருவர் படுகாயம்

அம்பாறை, அக்கரைப்பற்று பிரதேசத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் சாவடைந்துள்ளனர். அத்துடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீதியில் பயணித்த ஒரு மோட்டார் சைக்கிள், ஓட்டோ ஒன்றை முந்திச் செல்ல முயன்ற போது எதிரில் வந்த மற்றுமொறு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த 51 மற்றும் 77 வயதுடையவர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவில் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பொத்துவில் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார் எனவும், பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பொத்துவில் வைத்தியசாலையில் சிகிச்சை காகச் சேர்க்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் படுகாயமடைந்த மற்றைய நபர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 50 வயது பெண் ரயிலுடன் மோதி சாவு

ரயிலுடன் மோதி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் சீதுவை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

ரயில் கடவையின் ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த பெண்ணே ரயிலுடன்மோதி சாவடைந்துள்ளார்.

சீதுவை பிரதேசத்தின் லியனகேமுல்லை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய அந்தப் பெண், கொழும்பில் இருந்து நீர்கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் சீதுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் களமிறங்கிய ஆதிவாசிகள்

( எஸ்.நிதர்ஷன்)

இலங்கை ஆதிவாசிகள் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டனர்.

ஆதிவாசிகள் தலைவர் குரு வலத்து வர்மே வலத்த முதன் தலைமையிலான ஆதிவாசிகள் குழுவினர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கையின் மஹியங்கனையில் வசித்து வருகின்ற ஆதிவாசிகள் குழுவினர் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

காலையில் வவுனியாவில் அவர்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மதியம் யாழ்ப்பாணத்த வந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கான இரண்டு நாள் சுற்றுப் பயணத்தின் பல்வேறு பிரசித்தி பெற்ற இடங்களைச் சுற்றிப் பார்வையிடவுள்ள அவர்கள், இங்குள்ள ஆலயங்களுக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

ஆதிவாசிகளின் தலைவர் தலைமையிலான இந்தக் குழுவில் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை குடும்பம் குடும்பமாகவே பலரும் வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.












# யாழ்ப்பாணத்தில் நாடகத் திருவிழா: முதல் தடைவையாக நடத்த ஏற்பாடு!

## யூனியன் கல்லூரியில் மூன்று தினங்களுக்கு

(எஸ்.நிதர்ஷன்)

கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வரும் டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஏற்பாட்டில் அபேக்ஷா தமிழ் நாடகத் திருவிழா முதற்தடவையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். வலிகாமம் வலயத்துக்கு உட்பட்ட யூனியன் கல்லூரியில் எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் மூன்று தினங்கள் இந்த நாடகத் திருவிழா நடைபெறவுள்ளது.

இந்த நாடகத் திருவாழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கலாசார அமைச்சின் நாடக மத்திய நிலையமாக விளங்கும் டவர் மண்டபத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி சண்முகசர்மா ஜெயபிரகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது-



கலைத்துறையின் மேம்பாட்டுக்காகவும் கலைஞர்களின் கௌரவத்துக்காகவுமே டவர் மண்டப அரங்க மன்றம் செயற்பட்டு வருகின்றது.

கொழும்பில் எல்பிஸ்டன் மற்றும் டவர் அரங்கில் வருடந்தோறும் நடைபெறும் நாடக திருவிழாவை டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஏற்பாட்டில் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்த உள்ளோம்.

இங்குள்ள பாடசாலை மாணவர்களின் நாடகத் திறமைகளையும் நாடகக் கலையையும் வளர்ப்பதற்காகவும் அபேக்ஷா யாழ். தமிழ் நாடகத் திருவிழா எனும் தொனிப் பொருளில் முதற்தடவையாக இந்த நாடக விழா யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணத்திலுள்ள கல்வி வலயங்களில் நாடகமும் அரங்கியல்துறை ஆசிரிய ஆலோசகர்களையும், இப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும், உயர்தரம் மற்றும் சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் மாணவர்களையும் துறை சார்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

இங்கு தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ள நாடகத் திருவிழாவில் டவர் மண்டப அரங்க மன்ற பாடசாலை மாணவர்களின் நாடகங்களும் வலிகாம் பிரதேசத்தை முதன்மைப்படுத்தும் நாடக ஆசிரியர்களது நாடகங்களும் அரங்கேற்றப்படவுள்ளன.-என்றார்.




# நான்கு பாடசாலைகளுக்கு காணி அனுமதிப் பத்திரம்

(அ.அஸ்வர்)

அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நான்கு பாடசாலைகளுக்கு மைதானங்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு அண்மையில் (18) திருக்கோவிலில் இடம்பெற்றது.

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

திருக்கோவில் தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், திருப்பதி வித்தியாலயம், விஷ்வ துளசி வித்தியாலயம் மற்றும் , தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளுக்கும் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் கே. கஜேந்திரன், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச். பி. அனீஸ், திருக்கோவில் உடற்கல்விப் பணிப்பாளர் கங்காதரன், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.




**உரலார் கேள்வி:- ‘காசா’வில் கேட்பாரின்றி இஸ்ரேல் போடும் ஆட்டத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** கேட்பாரின்றி எனச் சொல்வது தவறு. ஐ.நா. மனித உரிமைச் சபை உட்பட வேறு சில நாடுகளும் கூட இஸ்ரேலின் அட்டூழியம் பற்றிக் கேள்வி எழுப்பவே செய்கின்றன. இஸ்ரேலுக்கு முழு ஆதரவைத் தந்து நிற்கும் அமெரிக்கா கூட, ‘காசாவில்’ இஸ்ரேல் கைவைக்கக் கூடாது என்று சொன்னதாய்க் கடைசியில் செய்திகள் வந்தன.

ஆனால் இஸ்ரேலின் ‘ஊழிக்கூத்தை’ எவராலும் நிறுத்த முடியவில்லை. கடந்த வாரம் இஸ்ரேல் வந்திறங்கிய அமெரிக்க அதிபர் ‘பைடன்’, ‘ஹமாஸ்’ இயக்கத்தை மட்டும் கண்டித்துவிட்டு இஸ்ரேலின் செயல் பற்றி ஏதும் கூறாமல் நாடு திரும்பி இருக்கிறார்.

இஸ்ரேல் உலக சமுதாயம் பற்றிய எந்தக்



கவலையுமில்லாமல், தன் இஷ்டத்திற்குப் பாலஸ்தீனத்தை ‘பிரித்து மேய்ந்து’ கொண்டிருக்கிறது.

எண்ணெய் வளம் கொண்ட அரேபிய நாடுகளை அடக்கித் தன் கீழ் வைத்திருக்க, அமெரிக்காவுக்கு இஸ்ரேலின் ‘நிலைத்தல்’அவசியமாய் இருக்கிறது.

ஏற்கனவே தன்முனைப்புக் கொண்ட ‘கடாபி’, ‘சதாம் உசைன்’ போன்ற வீரியம் மிக்க அரேபியத் தலைவர்களை, திட்டமிட்டுக் குற்றவாளிகளாக்கி, பகிரங்கமாகக் கொன்றொழித்து, ‘வாலாட்டினால் இதுதான் உங்களுக்கும் நடக்கும்’ என, மற்றைய அரேபிய நாடுகளை மறைமுகமாய் மிரட்டி வைத்திருக்கின்றது அமெரிக்கா.

தம் அழிவுக்கு அஞ்சி, தம்மின அழிவுக்கு ஏதும் செய்யமுடியாமல் மற்றைய அரேபிய நாடுகள் ‘கைபிசைந்து’ நிற்கின்றன.

இனித் தனது கையாளை யாரும் அசைக்க முடியாது என நம்பியிருந்த அமெரிக்காவுக்கு, ‘ஹமாஸ்’ குழுவினரின் இஸ்ரேல் மீதான தாக்குதல் அதிர்ச்சி அளித்திருக்கிறது.

தம்மை வெளிப்படுத்தாமல் மறைந்து நின்று தாக்கும் தீவிரவாத குழுவினரை ஏதும் செய்ய முடியாத நிலையில், அவர்களின் வெற்றிகண்டு அஞ்சிய அமெரிக்கா, அரபு நாடுகள் தமது கைவிட்டுப் போய்விடுமோ எனும் அச்சத்தில், ‘இது பொறுப்பதில்லை’ என முடிவுசெய்து, இஸ்ரேலின் தாக்குதலுக்குக் ‘கிறீன் சிக்னல்’ காட்டிவிட்டுச் சென்றிருக்கிறது.

இது நாள்வரை, அரபு நாடுகளுக்குள் பகை மூட்டி, அப்பம் பங்கிட்ட குரங்காக நடுவில் வந்து அந்நாடுகளின் வளத்தைப் பிய்த்துப் பிய்த்து, கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்று கொண்டிருந்த அமெரிக்கா இப்போது இந்தச் சம்பவத்தைச் சாட்டாய் வைத்து, மிஞ்சியிருக்கும் முழு அப்பத்தையும் விழுங்கிவிட முடிவு செய்துவிட்டதாய்த் தோன்றுகிறது.

தற்போதைய போரை ஆரம்பித்த குற்றம் ‘ஹமாஸ்’ குழுவினரையே சாரும் என்பதில் ஐயமில்லை. ‘எண்ணித் துணியாத’ அவர் தம் செயலால் இன்னலுற்று நிற்கிறது பாலஸ்தீனம். அந்தக் குழுவினரும், மனிதாபிமானம் இன்றியே நடந்துகொண்டார்கள் என்பதில் ஐயமில்லை.

யார் இந்தப் பிரச்சினைகளை முதலில் ஆரம்பித்தார்கள் என்பதுதான் முக்கிய கேள்வியாகிறது. அந்த வகையில் ‘ஹமாஸு’டன், இஸ்ரேலையும் குற்றக்கூண்டில் ஏற்ற வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

ஆயிரந்தான் இருந்தாலும் ஒரு சிறு குழுவினருடைய மனிதாபிமானமற்ற தாக்குதல்களுக்காகக் குழந்தைகள், முதியோர், நோயாளிகள், கர்ப்பிணிகள் என எவர் பற்றியும் கவலைப்படாமல், ஒரு தேசத்தையே அழிக்க நினைப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது என்றே கருதுகிறேன்.

இதைத்தான் எங்கள் நாட்டிலும் செய்தார்கள். பலம், வசதி, வாய்ப்பு என்பவை தமக்குச் சார்பாக இருப்பதை வைத்துக் கொண்டு, பலவீனப்பட்ட ஒரு மனிதக்குழுவை அழித்துவிட நினைப்பது மிகப்பெரிய தவறாகும்.

வல்லரசுகளும், ஐ.நா.சபை போன்ற பல அமைப்புக்களும் , பொருளாதார வசதியும் தமக்குச் சார்பாக இருப்பதை வைத்துக் கொண்டு, ஒரு மனிதக் குழுவை அழிக்க நினைப்பவர்கள், மேற்சொன்ன ஆற்றல்களுக்கெல்லாம் அப்பால், ‘தர்மம்’ என்கின்ற ஒரு வலிய ஆற்றல் இருப்பதை மறந்துபோய் விடுகிறார்கள்.

காலம் வரும்வரை காத்திருந்து தர்மம் தன்

**(10ஆம் பக்கம் பார்க்க)**

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலையைத் தொடங்கும். அப்போது அதன் ஆற்றலின் முன்பாக, மேற்சொன்ன ஆற்றல்கள் எல்லாம் தூசுக்குச் சமானமாய்ப் போய்விடும் என்பதுவே நிஜமாம். ‘எம்மை இனி அசைக்க முடியாது’ என நினைந்து நம் நாட்டில் ஆட்டம் போட்டவர்கள், ஒளிய இடந்தேடி ஓடிய கதையே, மேற்சொன்ன உண்மைக்கான உதாரணமாம்.

பல நாடுகளை அழித்துச் சாம்ராஜியங்களை நடத்தி, ‘இனி உலகம் நம் கையில்தான்’ என நினைந்தவர்களின் சந்ததியினர் கூட இன்று எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாத வகையில் அழிந்துபோய் விட்டார்கள். அதுதான் தர்மத்தின் செயல்!.

‘அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை’ என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஆறுதல் சொல்ல ஆள் இல்லாத நிலையில், ஒருவனை வருத்தி அழவைத்தால் அவன் விடும் கண்ணீரே, வருத்தியவனின் செல்வத்தைத் தேய்த்து அழித்து விடும் என்பதே இக்குறளுக்கான பொருள். இந்தக் குறளை இஸ்ரேலியர்களுக்கும், எங்கள் நாட்டில் ‘குத்தாட்டம்’ போட நினைக்கும் சிங்களத் தீவிர வாதிகளுக்கும் யாரேனும் எடுத்துச் சொன்னால் நல்லது.

**சல்லடையாரின் சலிப்பு :- வாரிதியார், எதையோ மனதில் வைத்து எதற்கோ பதில் சொல்லியிருக்கிறார். ‘வெல்டண்’ வாரிதியார்!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி:- நவராத்திரி காலம் என்ற படியால் கேட்கிறேன். கல்வியா? செல்வமா? வீரமா? என்று ஒரு பட்டி மண்டபம் நடத்தினால் நீங்கள் எந்த அணிக்குத் தீர்ப்புச் சொல்வீர்கள்?**



**உலக்கையார் பதில் :-** எல்லா நவராத்திரி காலங்களிலும் தோண்டி எடுக்கப்படும் ரொம்பப் பழமையான, சலிப்புற்ற பழைய பட்டி மண்டபத் தலைப்பு இது. இந்தத் தலைப்பில் எந்த அணிக்கு வேண்டுமானாலும் தீர்ப்பைச் சொல்லலாம். இந்தத் தலைப்பை வைத்தே ‘சரஸ்வதி சபதம்’ என்ற ஒரு படத்தைக் கூட அந்தக் காலத்தில் எடுத்திருந்தார்கள்.

பெரும்பாலும் கல்விக் கூடங்களில் நடத்தப்படும் மேற்படி பட்டி மண்டபங்களில், கல்வி அணிக்கே தீர்ப்பளித்து, நாங்களும் ஏதோ பெரிய கல்விமான்கள் போலக் காட்டிக் கொள்கின்ற வழக்கத்தை அப்போதெல்லாம் கடைப்பிடித்து வந்தோம். நினைத்துப் பார்த்தால் அது எவ்வளவு பெரிய தவறென்று இப்போது தெரிகிறது.

வலிமையற்றவனிடம் இருக்கும் கல்வியும் செல்வமும் பயனற்றதாய்ப் போகும்.

கல்வியற்றவனிடம் இருக்கும் வலிமையும் செல்வமும் பிழைத்துப் போய்விடும்.

செல்வமற்றவனிடம் இருக்கும் கல்வியும் வலிமையும் மதிப்பிழந்து போய்விடும்

இதுதான் யதார்த்தஉண்மை.

நம் உடம்பில் மூன்று நாடிகள் ஓடுகின்றன. வாத நாடி, பித்த நாடி, சிலேற்ப நாடி என்பது அவற்றின் பெயர். வாத நாடி என்பது காற்றைக் குறிப்பது. பித்த நாடி என்பது நெருப்பைக் குறிப்பது. சிலேற்ப நாடி என்பது நீரைக் குறிப்பது.

இறைவன் ஏதோ அற்புதம் செய்து, ஒன்றுக்கொன்று மாறுபடும் இந்த மூன்று நாடிகளையும் நமது உடம்பிற்குள் சமப்படுத்தி வைத்திருக்கிறான்.

அது என்ன மாறுபாடு என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன்! காற்றால் நெருப்பு வளரப் பார்க்கும். நெருப்பால் நீர் வற்றப் பார்க்கும். இத்தகைய முரண்படும் மூன்று பொருள்களை ஒன்றால் மற்றொன்று பாதிப்புறாமல் சமப்படுத்தி வைப்பதென்பது ஆண்டவனால் மட்டுமே முடிந்த காரியம்.

இறைவன் இம் மூன்றையும் சமப்படுத்தித்தர, அந்தச் சமப்படுத்தலைப் பிழைபடாமல் பேணினாலே நமது உடம்பு ஆரோக்கியமாக இருக்கும். அது மிகமிகக் கடினமான காரியம்.

இந்த மூன்றில் எந்த ஒன்று தன் அளவைவிடக் கூடினாலோ குறைந்தாலோ, அந்த உடம்பு நோய்க்கு ஆளாகி அழிந்துவிடும்.

கல்வி, செல்வம்,வீரம் என்பவையும் அப்படித்தான். அவற்றையும் சமப்படுத்திப் பேணக்கூடியவர்களுக்கே அவற்றால் சுகம் விளையும். இவற்றில் இதுதான் சிறந்தது என்று ஒன்றைச் சொல்வது கூட அவற்றின் சமநிலையைக் கெடுப்பதாய் ஆகிவிடும்.

அப்படி இம் மூன்றில் ஒன்று சிறந்திருந்தால் ஒருவன் பயனற்ற வாழ்வை வாழ்கின்றான் என்பதுதான் அர்த்தம்.

அதனால் கல்வி, செல்வம், வீரம் என்ற மூன்றில் ஒன்றுதான் சிறந்தது என நான் இனி ஒருநாளும் தீர்ப்பளிக்க மாட்டேன் அப்படித் தீர்ப்பளித்தால் அது அறியாமையின் அடையாளமாகிவிடும்.

**சல்லடையாரின் சலிப்பு :- வாரியார் சொல்லுறது ‘கரீரீட்டுங்கோ!’**

✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி:- நடிகர் விஜயின் புதிய சினிமாவான’லியோ’ வெளியீட்டின்போது, அவரது வெறிபிடித்த தமிழ் நாட்டு இரசிகர்களின் கூத்துக்களைப் பார்த்து ரசித்தீர்களா? வெறுத்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** ரசிக்கும் அளவிற்கா அந்தக் கூத்துகள் இருந்தன? தம் உணர்ச்சிகளை இவ்வளவு மோசமாகவா இவர்கள் வெளிப்படுத்த வேண்டும்? அந்த ரசிகர்கள் தமது கதாநாயகனை இழிவுபடுத்தினர் என்றே எனக்குத் தோன்றியது.

தமிழ்நாட்டில் நடக்கும் எத்தனையோ விடயங்களைப் பார்த்து, இது போல நமது நாட்டிலும் நடக்கவேண்டுமே என நான் ஏங்கி இருக்கிறேன். இந்த ரசிகர்களின் வரம்புமீறிய உணர்ச்சி வசப் பாட்டைப் பார்த்ததும், முதற்தரமாய் இது போல நம் நாட்டில் வந்துவிடக் கூடாதே என இப்போது பிரார்த்திக்கத் தொடங்கி இருக்கிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு :- வாரிதியாருக்கு அதெல்லாம் ஏற்கனவே இங்கேயும் வந்துவிட்டது தெரியாதுபோல...**



# திருமலை முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவுக்குப் புதிய பணிப்பாளர்!

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் புதிய பணிப்பாளராக என்.எம்.நௌபீஸ் திருகோணமலையில் உள்ள அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் (20) கடமை யைப் பொறுப்பேற்றார்.

அவரது நியமனக் கடிதத்தை மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம். பி.எஸ்.ரத்நாயக்க திருகோணமலையில் உள்ள மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

கிழக்கு மாகாண ஆளுனரால் இந் தப் பதவிக்கான நியமனம் மேற் கொள்ளப்பட்டது.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரி யான இவர் முன்னால் மாகாண விளை



யாட்டு பணிப்பாளர், கிண்ணியா ஏறாவூர் நகர சபைகளின் செயலாளர், சிறு கைத்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர், மாகாண விவசாய அமைச் சின் உதவிச் செயலாளர் ஆகிய பதவிகளில் செயற்பட்டவர்.

பொதுத்துறை நிர்வாகத்தில் முதுமாணிப்பட்டம் பெற்றுள்ளார். சட்ட இளமாணி கற்கையையும் பூர்த்தி செய்துள்ளார்.

# கல்முனையில் வாணிவிழா!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த வாணி விழா நாளை (23)திங்கட்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜி னோல்ட் எவ்.எஸ்.ஸி. தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

கல்முனை ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், பிரதம குரு சிவ ஸ்ரீ கோபால நிரோஷன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவ ராஜா, கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சரவணமுத்து ஆகியோரும் கலந்து கொள்வார்.

இதேவேளை கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வருடாந்த வாணி விழா அதிபர் திருமதி விஜயசாந்தி நந்தபால தலைமையில் நாளை நடைபெறவுள்ளது. ஆன்மீக அதிதியான மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீ மத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அருளுரை வழங்குவார்.

அத்துடன் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் வருடாந்த வாணி விழா நாளை பணிமனையின் கணக்காளர் சீ.திருப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.





# அக்கரைப்பற்று வீரமாகாளி ஆலயத்தில் பாற்குட பவனி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்கரைப்பற்று சின்னக்குளம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவில் பாற்குட பவனி கடந்த வியாழக்கிழமை பெருந் திரளான பக்தர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கு.கேதீஸ்வரக்குருக்களின் தலைமையிலான பூஜை வழிபாடுகளோடு பாற்குடபவனி இடம்பெற்றது. வீரமாகாளியம்மன் ஆலயத் தலைவர் பி.பிராசந்தன் உள்ளிட்ட ஆலய அறங்காவலர்கள்உற்சவகால குரு சிவத்திரு இ.யோகானந்தம், உதவிக் குருமார்களான சக்தி பிரியன், சிவத்திரு சோ.கஜேந்திரன், இளஞ்சுடர் சிவத்திரு யோ.மோகன்ராஜ், சிவத்திரு ஜெ.ஜெயரூபன் சக்திதாசன, சிவத்திரு வி.நிசாந் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.





# கல்வி அமைச்சில் நவராத்திரி விழா

(பொகவந்தலாவ நிருபர் )

பத்திரமுல்லை இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் (20) வெள்ளிக்கிழமை நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டார்.

விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இதன்போது பாடசாலை மாணவர்களின் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் கல்வி அமைச்சின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், மதகுருமார் கலந்து கொண்டனர்.





# சாய்ந்தமருதில் ஆசிரியர் தின விழா

(ஏ.எஸ்.மௌலானா, யூ.கே. காலிதீன்)

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலையின் ஆசிரியர் தின விழா கடந்த வியாழக்கிழமை (19) நடைபெற்றது.

அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிமனை யின் நிர்வாகத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் கலந்து கொண்டார். அத்துடன் கல்முனை வலயக் கல்வி பணிமனையின் கணக்காளர் வை. ஹபிவுல்லா, பிரதிக் கல்விப் பணிப் பாளர்களான எம்.எச். றியாசா, பி. ஜிஹானா, உதவிக் கல்வி பணிப்பாளர் களான திருமதி ஏ. ஏ. மலிக், எல்.எம். சாஜித், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலிக் ஆகியோ ரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலையின் ஆசிரியர் குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை, கலாசார நிகழ்ச்சிகள் பலவும் அரங்கேற்றப்பட்டன.

அத்துடன் ஏ.வி.எஸ். சிமாட் நிறுவனத்தின் பணிப்பாளர். ஏ.ஏ. அஷ்ரப் அலியின் அனுசரணையில் விஷேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர் தின சிறப்பு நினைவுப் பரிசில்கள் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அதிதிகளுக்கு வழங்கப்பட்டன.




# மதங்களைக் கடந்த மகான் சீரடி சாயி பாபா

எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, விஜயதசமி திதி. சீரடி சாயி பாபா அவதரித்த, மற்றும் மகா சமாதியடைந்த நன்னாள். உலகில் அவதரித்த மகான்களில் முதன்மையானவர்.

இந்து மதத்திற்கும் இஸ்லாம் மதத்துக்கும் இடையே அன்பு, பொறுமை, நல்லெண்ணம் போன்றவற்றை ஏற்படுத்தி, அந்த இன மத மக்களை, அவரவர் மதத்தைப் பின்பற்ற வைத்தார்.

“ராமரும், ரஹீமும் ஒன்றுதான். அவர்களுக்குள் எந்த வேற்றுமையும் இல்லை. அதுபோல் இரு பிரிவு மக்களும் ஒற்றுமையுடன் இருக்கவேண்டும். இருவரும் போராடி, வாதாடுவதால் நன்றன்று. எனவே விவாதிக்கவேண்டாம். மற்றவர்களுடன் போட்டி போட வேண்டாம். தியாகம், யோகம், ஞானம் போன்ற வழிகள் மூலம் கடவுளை அறிந்துகொள்ளுங்கள். யாராவது, ஏதாவது தீமையை உங்களுக்குச் செய்தால், அதற்காகப் பழிக்குப் பழி வாங்காதீர்கள் . நீங்கள் ஏதேனும் செய்ய இயலுமானால் பிறருக்குச் சிறிது நன்மைகளைச் செய்யுங்கள். அதுபோதும்” இதுதான் சீரடி பாபாவின் உபதேசம்.

சீரடி சாயி மத மாற்றத்தை எப்போதும் எதிர்த்துவந்தவர். ஒரு தடவை, மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மாறிய ஒருவர், பாபாவை தரிசனம் செய்ய வந்தபோது, அந்த பக்தரின் முகத்தில் வேகமாகத் தட்டி, கோபத்துடன் ‘என்னடா, உனக்கு நீயே ஒரு தகப்பனைத் தேடிக் கொண்டுவிட்டாயா?’ என்று கடிந்து கொண்டதுண்டு. அவர் தன் வாழ்வில்



இரண்டு வேறு வேறு சம்பவங்களின் மூலமகத் தான் மதங்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதை நிரூபித்துள்ளார்.

சீரடி சாயி பாபாவின் மகாசமாதி தினம் எதிர்வரும் 24 ஆம் திகதி விஜயதசமியன்று வருகிறது. கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சீரடி மந்தீரில், முழு நாள் நிகழ்ச்சிகளாக யாகம், பூஜைகள், பஜனை, அன்னதானம் என்று நடைபெறவுள்ளன.

விஷேடமாகச் சீரடி சாயி பக்தர்களின் காணிக்கையாக,இலங்கையில் சீரடி சாயி பாபாவுக்கு, முதல் முதலாக 54 சவரணில் முழு தங்க மகுடம், விலையுயர்ந்த பச்சை மரகதக் கல் பதிக்கப்பட்டு சூட்டப்படவுள்ளது. அன்று மாலை புதிதாக மரக்குதிரைகள் பூட்டப்பட்ட சித்திரத் தேரோட்டம் இடம்பெறும்.

25 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை, இலங்கையில் முதல் முறையாக, தினமும் மாலை 6 மணிக்கு, சீரடி மந்தீரில், இந்திய தொலைக்காட்சி புகழ் ஆன்மீகப் சொற்பொழிவாளர் திருமதி சௌமியா அபிஷேக் ராஜ்'வின் சிறப்பு சீரடி சாயி சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இவர் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, சிரமப்பட்டு பல நாள்களாக அலைந்து திரிந்து, சீரடி சாயி பாபாவின் சீடர்கள் மற்றும் அவருடன் பழகியவர்கள், வாழ்ந்தவர்கள், அவர்களது குடும்ப அங்கத்தவர்களைக் கண்டுபிடித்து, பாபாவின் பல அற்புத லீலைகளை தெரிந்துகொண்டவர்.

சீரடி சாயி பாபாவின் நடவடிக்கைளை இடைவிடாத தேடலின் மூலமாக அயராது ஆராய்ச்சி செய்தவர். தனது சொற்பொழிவில் சீரடி சாயி பாபாவைப்பற்றிய பல அற்புதங்களை வெளிபடுத்தவுள்ளார்.

**எஸ்.என். உதய நாயகம்**
சீரடி சாயி மத்திய நிலையம்,
இலங்கை.





# திருக்கோயில் சிவன் அருளால் கணினி சான்றிதழ்கள் வழங்கல்

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உட்பட்ட வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சிவன் அருள் அமைப்பின் ஊடாக அந்த மாணவர்களின் கணினி கல்வியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முனைவர் நித்தியானந்தனின் லண்டன் ரட்ணம்நிதியத்தின் அனுசரணையுடன் கணினி கல்வியில் சித்தி அடைந்த 47 மாணவர்களுக்கு 3 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கிழக்கு மாகாணத்தில் திருக்கோயில்



பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிவன் அருள் அறநெறி மற்றும் கல்வி நிலைய புதிய கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கட்டடத்தின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் திருக்கோயில் பிரதேச செயலாளர் தலைமையில் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



# பிரியாவிடை...

**(அபு அலா)**

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய நீதிபதி என்.எம்.அப்துல்லா திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார்.

அவருக்குப் பிரியாவிடை நிகழ்வு மட்டக்களப்பு நீதிமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றது.

இதன்போது, இடமாற்றம் பெற்றுச் செல்லும் நீதிபதி என்.எம்.அப்துல்லாவை நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னம் வழங்கி வழியனுப்பினர்.

# முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் பொதுக் கூட்டம்

**(பழுவூரான்)**

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை (22) மட்டக்களப்பு ஆரையம்பதியில் இடம்பெறவுள்ளது.

அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் செயலாளர் நாயகம் வீ.பற்குணனின் ஏற்பாட்டில் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.முபாறக் தலைமையில் ஆரையம்பதி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் இது இடம்பெறவுள்ளது.

பொதுக் கூட்டத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் அவற்றை நிவர்த்திப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது. அத்தோடு தொழிற் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் இப் பொதுக் கூட்டத்துக்கு அழைப்பதுடன், புதிதாக இணைவதற்கு விருப்பமுள்ள உத்தியோகத்தர்களும் இந்த நிகழ்வில் பங்குபற்றி தொழிற் சங்கத்திலும் இணைந்து கொள்ளலாம் என்று தொழிற் சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.முபாறக் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் சங்கத்தின் தலைவர், செயலாளர் நாயகம், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் தெரிவு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லையில் முன்பள்ளி மாணவருக்கு இணையவழிக் கல்வி முறை ஆரம்பம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்முறையாக முன்பள்ளி மாணவர்களுக்கு இணைய வழி இலத்திரனியல் கல்வி முறைமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கள்ளப்பாடு தெற்கு முகிலன் முன்பள்ளியில் இணையவழி இலத்திரனியல் கல்வி முறைமை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த அமரர் லூயிஸ் போல் நினைவாக, அவருடைய மகனான றோஹஹன்போல் மற்றும் அவரது குடும்பத்தால் நிதி உதவி அளிக்கப்பட்டு, விசன்ஸ் குளோபல் எம்பவர்மன்ற் நிறுவனத்தால் இந்தத் திட்டமானது முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கு முகிலன் முன்பள்ளியில் கடந்த வியாழக்கிழமை(19) தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உ.சுரேஷ்குமாரும் சிறப்பு விருந்தினர்களாக விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ந.தெய்வேந்திரராஜாவும் விசன்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அ.மயூரனும் கலந்து கொண்டனர்.

### சொந்த நாட்டு மக்களைக் கொன்றொழித்த இலங்கை அரசு

# இஸ்ரேல் - பாலஸ்தீன யுத்தத்தை நிறுத்துமாறு கோருவது வேடிக்கை!

## விசனம் தெரிவிக்கிறார் ஜனா எம்.பி.

(பழுவூரான்)

சொந்த நாட்டு மக்களை பொஸ்பரஸ் குண்டுகள் மூலமாகவும், கொத்துக் குண்டுகள் மூலமாகவும், வான்வழிக் குண்டுகளாலும் கொன்றொழித்த இலங்கை அரசுக்கு, பாலஸ்தீன–இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்தும் படி கோருவதற்கு எந்தவிதமான யோக்கியதையோ அருகதையோ இல்லை. இது வேடிக்கை தரும் ஒரு விடயமாகவே உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (20) மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு–

வடக்கு - கிழக்கு தழுவிய ஹர்த்தாலுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அழைப்பு விடுத்திருக்கிறார்கள். தமிழ் தேசிய கட்சிகளின் அழைப்பை ஏற்றுக் ஹர்த்தாலை அனுஷ்டித்த உறவுகளுக்கு நான்நன்றிகூறகடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரமல்லாமல் உண்மையிலேயே முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக இருந்து தனக்கு அச்சுறுத்தல் எனக் கூறி நாட்டை விட்டு வெளியேறிய நீதிவானுக்காக மாத்திரம் அல்லாமல் வடக்கு - கிழக்கில் நடைபெறும் அத்துமீறல்களுக்கும் பௌத்த மயமாக்கல்களுக்கும் மட்டக்களப்பில் நடைபெறும் மேய்ச்சல் தரைப் பிரச்சினை அனைத்தையும் உள்ளடக்கியே நாங்கள் இன்றைய தினம் தமிழ் பேசும் மக்களை ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்படி கேட்டிருந்தோம்.

அத்தோடு இன்றைய தினம் மின்சாரக் கட்டணம் 18 வீதத்தால் உயர்த்தப்படுகின்றது. அதாவது சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசுக்கு இரண்டாவது கட்ட நிதி உதவி கொடுப்பதற்காக இலங்கையின் திறைசேரியில் பணம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

அதற்கு அமைய அந்தப் பணத்தை வைத்துக் கொள்வதற்காக எங்களுடைய நாட்டு மக்களின் வயிற்றில் அடித்து அவர்களது மின்சாரக் கட்டணத்தை 18 வீதத்தால் உயர்த்தி அந்தப் பணத்தைச் சேகரித்து சர்வதேச நாணய நிதியத்துக்குக் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த கொரோனாக் காலமிருந்தே கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின்



வயிற்றிலடிக்கும் ஒரு செயலாகவே நாங்கள் இதைப் பார்க்கின்றோம்.

அந்த வகையில் அரசு தொடர்ச்சியாக இந்த நாட்டு மக்களை வஞ்சித்து கொண்டு வருகின்றது. அந்த வஞ்சிப்புக்கு எதிராக நாங்கள் எங்களுடைய கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முக்கியமாக இந்த பத்திரிகையாளர் மகாநாட்டை நான் கூட்டியதற்கான காரணம், இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் விசேடமாக ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை வந்திருக்கிறது. அதாவது, மத்திய கிழக்கு நாடுகளில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக ஒரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று உலக நாடுகளிடமும் போர் செய்து கொண்டிருக்கும் அந்த பலஸ்தீனம் இஸ்ரேல் நாடுகளிடம் அந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு வேண்டி இந்த ஒத்திவைப்பு பிரேரணையைக் கொண்டு வந்து விவாதம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

நான் கேட்பது என்னவென்றால், கடந்த 14 வருடங்களுக்கு முன்பு 2009 ஆம் ஆண்டு எங்களது யுத்த முடிவுற்ற நேரம் வரைக்கும் முள்ளிவாய்க்காலில் நடைபெறாத விடயமா? இன்று மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெற்று வருகிறது.

14 வருடங்களுக்கு முன்பு 7சதுர கிலோ மீற்றருக்குள் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை திறந்த வெளி சிறைச்சாலையில் அடைத்து வைத்ததைப் போல், அவர்களை அந்த 7 சதுர கிலோ மீற்றருக்குள் வைத்து பொஸ்பரஸ் குண்டுகள் மூலமாகவும், கொத்துக் குண்டுகள் மூலமாகவும் வான்வழி மூலமாகவும் அழித்து அதில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் மனித உயிர்களை பலி எடுத்த இந்த இலங்கை அரசு, அதுவும் சொந்த நாட்டிலே சொந்த மக்களை பலி எடுத்த இலங்கை அரசு எவ்வாறு போரை முடிவுக்குக் கொண்டு வரும்படி கோர முடியும்.

இஸ்ரேல்– பலஸ்தீனம் ஆகிய இரண்டு நாடுகள் போர் புரிகிறார்கள். மனித உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மனித உயிர்கள் பலி எடுக்கப்படக் கூடாது என்பதில் எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால் இந்தப் போரை நிறுத்தும்படி கேட்பதற்கு இலங்கை அரசுக்கு எந்த விதமான தார்மீக உரிமையும் இல்லை. எந்தவிதமான யோக்கியதையும் இல்லை. எந்த விதமான அருகதையும் இல்லை.

பாலஸ்தீனத்தில், இஸ்ரேலில் மனிதர்கள் கடத்தப்படுகின்றார்கள். அவர்கள் கொலை செய்யப்படுகின்றார்கள். அது சர்வதேச சட்டத்துக்கு முரணானது என்று கூறும் இலங்கை அரசு, தங்களது உறவினர்களால் கண்முன்னே கையளிக்கப்பட்ட உறவுகள் பற்றிக் கோரும் தனது மக்கள் விடயத்தில் கரிசனை இல்லாது உள்ளது.

கொக்குத்தொடுவாய் போன்ற பிரதேசங்களில் அகழ்ந்தெடுக்கப்படும் சடலங்கள் உறவினர்களால் கையளிக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்களுடையதாக இருக்கலாம் என்கின்ற சந்தேகம் உள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசுக்கு எந்தவிதமான அருகதையுமில்லை.

நாங்கள் மனித உயிர்ப்பலிக்கு எதிரானவர்கள். பாலஸ்தீனம் - இஸ்ரேல் இடையே நடக்கும் போர் நிறுத்தப்பட வேண்டும். அங்கு மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையுமில்லை. ஆனால் இலங்கை அரசுக்கு இதைக் கேட்பதற்கு எந்தவிதமான யோக்கியதையும் இல்லை என்பதைத்தான் நாங்கள் கூறுகின்றோம்.

அத்தோடு 2009இல் அத்தனை உயிர்களையும் பலி கொடுத்த இலங்கை அரசு இன்றுவரை இந்த இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வை காணாமல், தொடர்ச்சியாக மனித உயிர்களைப் பலி கொடுத்ததற்கு மேலாக வடக்குக் கிழக்கு பிரதேசங்களை பௌத்தமயமாக்கி இங்கு சிங்களவர்கள் தான் ஆதியிலிருந்து வாழ்ந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக கங்கணம் கட்டிக் கொண்டிருககின்றது.

இந்த அரசுக்கு, அங்கே ஒரு சமாதானம் வேணும் என்று கேட்பதற்கு எந்த விதமான அருகதையும் யோக்கியதையும் இல்லை.–என்றார்.



# ‘யாழ் கானம்’ இசை நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள்

தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் தலைமையிலான குழுவினரின் ‘யாழ் கானம்’ இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

(படங்கள்:– எஸ்.நிதர்ஷன்)













# ஹர்த்தால் போராட்டம் வெற்றியாம்

## சுரேஷ் அறிக்கையூடாக நன்றி தெரிவிப்பு

"தமிழர்களின் வாழ்வுரிமை காக்க ஹர்த்தால் போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள்!"

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பாக அதன் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"அனைத்து தமிழ் முஸ்லிம் கட்சிகளின் கோரிக்கைகளுக்கிணங்க பல வேறு அச்சுறுத்தல்கள், எதிர்ப்பிரச்சாரங்கள், கிண்டல்கள், கேலிகளுக்கு மத்தியில் ஜனநாயக விழுமியங்களை மதித்து, நாம் விடுத்த அழைப்பினை ஏற்று முழு முடக்க ஹர்த்தால் போராட்டத்தில் ஈடுபட்டு எமது உரிமைக் குரலினை அனைவரது காதுகளிலும் எட்டும்படிச் செய்த வர்த்தக சங்கத்தினருக்கும், ஊழியர் சங்கத்தினருக்கும், ஓட்டோ உரிமையாளர்கள் ஓட்டுனர்கள் சங்கத்தினருக்கும், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினருக்கும், ஏனைய தொழிற்சங்கத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புலனாய்வுத் துறையினர் எமது போராட்டத்தை முடக்குவதற்கு மேற்கொண்ட பல முயற்சிகளும் உங்களது துணிவினால் முறியடிக்கப்பட்டுள்ளதையும் நாம் நினைவுகூருகின்றோம்.

தியாகங்களினூடாகவே வளர்ந்த தமிழ்த் தேசிய இனத்துக்கு உங்களின் தியாகம் மேலும் ஒரு வைரக்கல்லாக அமைந்துள்ளது. தமிழ் மக்களுக்கான நீதி என்பது முற்றாக மறுதலிக்கப்பட்டு, புத்தகோயில்கள், சிங்களக் குடியேற்றங்கள் என்று அவர்களது இருப்பே கேள்விக்குள்ளாக்கப்பட்டு, தமிழ் மக்கள் நிர்க்கதியாக நிற்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான கவலைகளையும் கண்டனங்களையும் தெரிவிக்கும் முகமாகவும் இராஜதந்திரிகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தமிழ் மக்களின் இன்றைய நிலையை வெளிப்படுத்தும் முகமாகவும் இந்தக் ஹர்த்தால் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.



ஒருசில ஊடகங்கள் தங்களது சொந்த நிகழ்ச்சி நிரல் காரணமாக ஆரம்பத்திலிருந்தே இந்தப் போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வந்த போதிலும் மக்கள் ஒருமுகமாக நின்று இதனை ஒரு வெற்றிகரமான போராட்டமாக மாற்றியுள்ளனர்.

மக்கள் மத்தியில் கடந்த பத்து நாட்களாக நாம் மேற்கொண்ட பிரசாரங்களும் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளுடன் நாங்கள் மேற்கொண்ட கலந்துரையாடல்களும் இந்தப் போராட்டம் வெற்றியடையக் காரணமாக அமைந்தது.

பரீட்சை காரணமாக மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றார்கள் என்பதும் அரச உத்தியோகத்தர்கள் எப்போதும் இத்தகைய போராட்டங்களில் கலந்து கொள்வதில்லை என்பதும் வெளிப்படையானது. ஆகவே, அவற்றைத் தவிர்த்துப் பார்க்கின்றபோது, இந்தக் ஹர்த்தால் ஊடாக மக்கள் தெரிவித்த கண்டனங்கள் என்பது உரியவர்களின் காதுகளுக்கு எட்டியிருக்கும் என்று நம்புகின்றோம்.

போராட்டத்தில் கலந்துகொண்டு அதனை வெற்றியடையச் செய்த அனைவருக்கும் இதனை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டு தமது கருத்துக்களை ஊடகங்களிலும் சமூக வலைதளங்களிலும் பதிவு செய்த அனைவருக்கும் எமது நன்றிகள்!" – என்றுள்ளது.

# கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானம்

கல்வி அமைச்சுக்கு முன்பாக எதிர்வரும் 24ஆம் திகதி (நாளை மறுதினம்) ஆர்ப்பாட்டம்ஒன்றைமுன்னெடுப்பதற்கு ஆசிரிய – அதிபர் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த சபை தீர்மானித்துள்ளது.

அதன் பிரதி இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை செயற்பாடுகளுக்கு போதுமான நிதியை வழங்குதல் உள்ளிட்ட சில காரணங்களை முன்னிறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

30 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளன என ஆசிரிய – அதிபர் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த சபையின் பிரதி இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# 10ஆயிரத்து 77 ரயில் சேவைகள் கடந்த ஓராண்டில் மட்டும் ரத்து!

2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 10 ஆயிரத்து 77 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன என தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டு ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 993 ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன என அது குறிப்பிடப்பட்டுள்ளது.

அவற்றில், 32 ஆயிரத்து 844 ரயில்கள் மாத்திரமே உரிய நேரத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் 88 ஆயிரத்து 149 ரயில்கள் உரிய நேரத்தில் இயக்கப்படவில்லை எனவும் தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



# நாலாவது ஆட்டத்தில் நேற்று இலங்கைக்கு முதல் வெற்றி!

## நெதர்லாந்தை 5 விக்கெட்டுகாளால் தோற்கடித்தது

நடப்பு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தனது முதல் வெற்றியை நேற்றுப் பதிவு செய்துள்ளது. நெதர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி ஐந்து விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இது வரையில் நான்கு போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை அணியின் முதல் வெற்றி இதுவாகும்.

லக்னோவில் உள்ள பாரத ரத்னா ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றிருந்தது.

நாணய சுழற்சியின் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 262 ஓட்டங்களை பெற்றது.

நெதர்லாந்து அணி ஒரு கட்டத்தில் 91 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. 150 ஓட்டங்களை பெற்றுக்கொள்வதே பெரும் சந்தேகமாக இருந்தது.

எனினும், ஏழாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த சைப்ரண்ட் ஏங்கல்பிரெக்ட் மற்றும் லோகன் வான் பீக் ஆகியோரின் நிதான துடுப்பாட்டம் நெதர்லாந்து அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது.

இந்த இருவரும் சேர்ந்து 120 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். இது நெதர்லாந்து அணி சார்பில் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகூடிய இணைப்பாட்டம் ஆகும்.

சைப்ரண்ட் ஏங்கல்பிரெக்ட் 70 ஓட்டங்களையும், லோகன் வான் பீக் 59ஓட்டங்களையும்பெற்றுக்கொண்டனர். இலங்கை அணி சார்பில் தில்ஷான் மதுஷங்க மற்றும் கசுன் ராஜித ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

### நெதர்லாந்தின் வாய்ப்பை முறியடித்த சதீர சமரவிக்ரம

பின்னர் 263 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுகளை இழந்து வெற்றிபெற்றது.

இலங்கை தரப்பில் சதீர சமரவிக்ரம 107 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

பதும் நிஸ்ஸங்க 54 ஓட்டங்களையும் சரித் அசலங்கா 44 ஓட்டங்களையும் பெற்றனர். நெதர்லாந்து தரப்பில் ஆர்யன் தத் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

காயம் அடைந்த தசுன் ஷனகா இல்லாத நிலையில், குசல் மெண்டிஸ் இலங்கை அணியின் தலைவராக செயல்படுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது கடைசி போட்டியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நெதர்லாந்து அணி தென்னாப்பிரிக்காவை 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நேற்றைய போட்டியிலும் ஆரம்பத்தில் நெதர்லாந்து அணி சிறப்பாக பந்து வீசியிருந்தது. 104 ஓட்டங்களுக்கு இலங்கை அணியின் முக்கிய விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன.

எனினும், சதீர சமரவிக்ரம பொறுமையாக துடுப்பெடுத்தாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். ஆட்ட நாயகன் விருதையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி தற்போது புள்ளிப் பட்டியலில் ஒரு இடம் முன்னேறி ஒன்பதாவது இடத்தை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளி வாராந்த நிகழ்வு









தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளி வாராந்த நிகழ்வும் உதவி வழங்கலும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் இரா.செல்வவடிவேல் ஆசிரியரின் மகாபாரதச்சொற்பொழிவும், நவராத்திரி மகிமை என்ற தொனிப் பொருளில் செல்வி அமுதாஸ் நிலாவினியின் பேச்சும் இடம்பெற்றன.

தொடர்ந்து ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் உதவிகள் வழங்கப்பட்டன.

47 அயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் மடு, நன்னாட்டான் பிரதேசத்தை சேர்ந்த மாணவிக்கு வழங்கப்பட்டது.

மருத்துவ சிகிச்சைக்காகச் சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவுள்ள குடும்பத்தினருக்கு 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இந்த உதவிகளைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.

நவராத்திரி நிகழ்வுக்காகப் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரிக்கு 40 ஆயிரம் ரூபா நிதியும் சிறுவர் தின நிகழ்வுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியும் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

# சம்பியன் அணிக்குக் கௌரவிப்பு

(எம்.எப்.நவாஸ்)

மாவட்ட சம்பியனாகத் தெரிவான பாலமுனை இளைஞர் கழக அணி தேசிய மட்டத்துக்கு விளையாடுவதற்கு எம்பிலிபிட்டிய செல்லவுள்ளனர். இந்த நிலையில் தெரிவான மாணவர்கள் அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் செயலக உத்தியோகத்தர்களை அண்மையில் சந்தித்தனர்.

இளைஞர் கழக எல்லே விளையாட்டுப் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேசத்தை பிரதிநிதிதுவப்படுத்தி விளையாடிய பாலமுனை இளைஞர் கழக அணி எல்லே போட்டியில் நாவிதன்வெளி பிரதேச செயலக அணியினரை 01:02 என்ற புள்ளியடிப்படையில் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இவர்களைப் பாராட்டிய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அவர்களுக்கு பணப் பரிசும் வழங்கிக் கௌரவித்தனர்.





# மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் திட்டம்: சோதனை விண்கலத்தை ஏவியது இந்தியா!



மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் சோதனை வாகனம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட் டுள்ளது. இஸ்ரோ தலைவர் சோமநாத் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் மாத்திரமே விண்வெளிக்கு மனிதனை அனுப்பியுள்ளன.

இந்த நிலையில், இந்த சாதனையை எட்ட இந்தியா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதற்கான திட்டத்திற்கு ககன்யான் என பெயரிடப்பட்டு இது தொடர் பான ஆராய்ச்சிகள் கடந்த 2014 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பூமியில் இருந்து 400 கிலோ மீற்றர் தூர சுற்றுவட்டப் பாதைக்கு விண்கலம் மூலம் 2 தொடக்கம் 3 விண்வெளி வீரர்களை அனுப்பி, 1 முதல் 3 நாள் ஆய்வுக்கு பின்னர் பூமிக்கு திரும்ப அழைத்து வருவதே ககன்யான் திட்டத்தின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்துக்கான முதல்கட்ட சோதனை நேற்று காலை 8 மணி முதல் 9 மணிக்குள் ஆரம்பிக்க இஸ்ரோ திட்டமிட்டிருந்தது. ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவாண் ஏவுதளத்தில் இருந்து வாகனத்தை விண்வெளிக்கு அனுப்பி, அதை மீண்டும் பூமிக்கு கொண்டு வந்து, வங்காள விரிகுடாவில் இறங்கியதும் அதை அங்கிருந்து மீட்பது என திட்டமிடப்பட்டிருந்தது. இந்த சோதனைக்கு டிவி-டி1 எனும் ஒரு பூஸ்டர் கொண்ட ரொக்கெட் பயன்படுத்தப் பட்டுள்ளது.

புவியில் இருந்து ரொக்கெட் புறப்பட்டு சுமார் 17 கிலோ மீற்றர் உயரத்தில் சென்றதும் விண்கலத்தில் வீரர்கள் அமரும் பகுதி தனியாக பிரிந்துவிடும்.

அதை பாராசூட்கள் மூலம் ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் வங்கக்கடலில் பத்திர மாக இறக்கி சோதனை செய்யப்பட உள்ளது. வங்கக்கடலில் விழுந்த உடன் விண்கலத்தை இந்திய கடற்படையின் சிறப்பு கப்பல் மற்றும் நீச்சல் குழுவினர் மீட்டு இஸ்ரோவிடம் ஒப்படைப்பார்கள். அதன் அடிப்படையில் அடுத்தகட்ட ஆராய்ச்சி பணிகளை விஞ்ஞானிகள் மேற்கொள்வார்கள்.

இந்த நிலையில், நேற்று காலை 8 மணிக்கு விண்ணில் ஏவுவதற்கு இஸ்ரோ தயாராக இருந்த நிலையில், விண்கலம் மேலே எழும்புவதில் சிக்கல் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனால், சோதனை ஓட்டத்தை தற் காலிகமாக நிறுத்தி வைப்பது என இஸ்ரோ முடிவெடுத்து, அதனை அறிவித்தது.

இதனையடுத்து, விண்கலம் பகு திக்குச் சென்று விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். தொழில்நுட்ப சரிபார்த் தலுக்குப் பின்னர் மீண்டும் சோதனை வாகனத்தை விண்ணில் ஏவும் பணி அடுத்த சில மணி நேரங்களில் தொடங் கப்பட்டது.

அப்போது சோதனை விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.

இதையடுத்து, இஸ்ரே தலைவர் சோமநாத், பின்னர் செய்தியாளர் களிடம் பேசினார். அப்போது, டிவி-டி1 திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியதை அறிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடை கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஜல்லிக்கட்டு போன்ற போராட்டத்தை மத்திய அரசு சந்திக்க வேண்டியிருக்கும்!

## - உதயநிதி எச்சரிக்கை

மத்திய அரசு நீட் விவகாரத்தில் அலட்சியம் காட்டினால் ஜல்லிக்கட்டு போன்ற வீரமிக்க ஒரு போராட்டத்தை சந்திக்க வேண்டியிருக்கும் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித் துள்ளார்.

நீட் தேர்வு விலக்கு கையெழுத்து இயக்கத்தை சென்னை கலைவாணர் அரங்கத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

இதன்போது அவர் உரையாற்றுகை யில், இந்த நீட் ஒழிப்புக்கான கையெழுத்து இயக்கத்தை திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கி இருந்தாலும், இதை மாபெரும் மக்கள் இயக்கமாகதான் முன்னெடுத்து செல்லவேண்டும்.

நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் இடுகின்ற இந்த ஒவ்வொரு கையெழுத்தும் தமிழ்நாட்டு கல்வி உரிமைப் போராட்டத்தின் உயிரெழுத்தாக என்றென்றும் நிலைத்திருக்கும். தமிழ்நாட்டின் கல்வி உரிமையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு



இருக்கிறது.

தமிழ்நாட்டில் நீட் தேர்வால் இன்னொரு மரணம் நிகழக் கூடாது. ஒன்றிய அரசு நமது மாநில அரசின் முயற்சிகளை தொடர்ந்து அலட்சியம் செய்து கொண்டிருந்தால், அடுத்து தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு போன்ற வீரமிக்க போராட்டத்தைத்தான் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். இதை ஒன்றிய அரசுக்கு எச்சரிக்கையாக சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களின் கல்வி உரிமைக்காகவும், நீட் விலக் குக்காகவும் அ.தி.மு.க. இந்த இயக் கத்தில் பங்கு கொள்ள வேண்டும். பா.ஜ.கவுடன் கூட்டணியில் இருந்த போதுதான் உங்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

இப்பொழுது நீங்கள் கூட்டணியி லிருந்து வெளியேறி விட்டதாகச் சொல் கிறீர்கள். அ.தி.மு.கவுக்கு ஒரு கோரிக்கை வைக்கிறேன்.

அ.தி.மு.கவினரும் வாருங்கள். நீட் ஒழிப்புக்காக சேர்ந்து போராடலாம். அனைத்து இயக்கத்தினரும் கையெ முத்து இயக்கத்தில் பங்கேற்று வெற்றி பெறச் செய்ய வேண்டும். டிஜிட்டல் முறையிலும் அஞ்சல் மூலமா கவும், கையெழுத்து இயக்கத்தில் பங்கேற் கலாம். நீட் விலக்கு தி.மு.கவின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல என்று தெரிவித்துள்ளார்.

# காசாவிலுள்ள மருத்துவமனை மீது மீண்டும் தாக்குதல் நடத்த திட்டம்!



பாலஸ்தீனத்தின் காசா நகரில் அமைந்துள்ள இரண்டாவது பெரிய மருத்துவமனையான அல்-குவாத் மருத்துவமனை மீது விரைவில் தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஏற்கெனவே காசாவில் உள்ள அல்-ஆஹ்லி மருத்துவமனை மீது ரொக்கெட் குண்டுகள்வீசப்பட்டதில், மருத்துவமனையில் இருந்த சுமார் 500 பேர் உயிரிழந்தனர். இந்த சூழலில் இந்த அறிவிப்பை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும், இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் காசாவில் உள்ள பழமையான தேவாலய வளாகத்தில் பலர் கொல்லப்பட்டனர் என ஹமாஸ் தெரிவித்தது.

இத்தகைய சூழலில் அல்-குவாத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள், அப்பகுதியில் வசித்து வரும் பொது மக்களை வெளியேற வேண்டும் என இஸ்ரேல் பாதுகாப்பு படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த மருத்துவமனை மீது விரைவில் தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது. காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் மருத்துவமனை, பாடசாலை மற்றும் மசூதி போன்ற இடங்களில் பதுங்கி இருக்க வாய்ப்பு உள்ள காரணத்தால் இஸ்ரேல் இராணுவம் இந்த இடங்களை நோக்கி தாக்குதல் நடத்தி வருகிறது என கூறப்படுகிறது.

# பாகிஸ்தான் திரும்பினார் நவாஸ் ஷெரீப்: நாட்டை மீட்டெடுப்பேன் என்று சபதம்



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று பாகிஸ்தானுக்கு திரும்பியுள்ளார்.

நவாஸ் ஷெரிப் மீதான ஊழல் வழக்கில், அவருக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் கடந்த 2018 ஆம் ஆண்டு 7 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. இதையடுத்து லாகூரில் உள்ள கோட் லாக்பாத் சிறையில் நவாஸ் ஷெரீப் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், நவாஸ் ஷெரீப்புக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் மாரடைப்பு எனக் கருதி சிறையில் உள்ள மருத்துவமனையில் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்தனர். சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பிய நவாஸ் ஷெரீப், கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி லாகூரில் இருந்து லண்டன் புறப்பட்டுச் சென்றார்.

பாகிஸ்தானில் இம்ரான் கானின் ஆட்சி இருந்ததால், தொடர்ந்து அவர் லண்டனிலேயே தங்கி இருந்தார். இந்த நிலையில், பாகிஸ்தானில் எதிர்வரும் ஜனவரியில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு அவர் நேற்று இஸ்லாமாபாத் திரும்பினார்.

முன்னதாக, லண்டனில் இருந்து டுபாய் சென்ற அவர், அங்கு சில நாட்கள் தங்கி இருந்துவிட்டு தற்போது சொந்த நாடுதிரும்பிஉள்ளார். இஸ்லாமாபாத்தில் இருந்து லாகூருக்கு விமானத்தில் சென்ற அவர் பின்னர் அங்கிருந்து தனது வீடு திரும்ப உள்ளார். அவரது வருகையை முன்னிட்டு லாகூரில் பிரம்மாண்ட வரவேற்புக்கு பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் கட்சியினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

நவாஸ் ஷெரீப்பின் வருகை குறித்து கருத்து தெரிவித்துள்ள கட்சியின் மூத்த தலைவர் க்வாஜா முகம்மது ஆசிப், இது கொண்டாட்டத்துக்கான தருணம். நவாஸ் ஷெரீப்பின் வருகை பாகிஸ்தானின் பொருளாதாரத்திலும் எதிரொலிக்கும். மக்கள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நாட்டினை வளர்ச்சிப் பாதைக்கு மீட்டெடுப்பேன் என நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் காரணமாக பாகிஸ்தான் நாட்டில் உணவுப் பொருட்களின் விலை, வீட்டு வாடகை, மின்சாரம், எரி வாயு மற்றும் போக்குவரத்து சார்ந்த கட்டணம் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று லாகூரில் நடைபெற்ற பேரணியின்போது கருத்து தெரிவித்த நவாஸ் ஷெரீப்,

எங்களது 1990 பொருளாதார திட்டத்தை ஏற்றிருந்தால் நாட்டில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டு இருக்கும். வறுமை என்ற பேச்சுக்கே இடம் இருந்திருக்காது. ஆனால், இன்றைய நிலை மிகவும் மோசமடைந்துள்ளது.

நான் பல ஆண்டுகளுக்கு பின்னர் உங்களை சந்திக்கிறேன். இருந் தாலும் அந்த அன்பில் இம்மியளவும் மாற்றமில்லை. உங்கள் அன்பை உங்களது கண்களின் வழியே நான் பார்க்கிறேன். எனது வலிகள் அனைத்தையும் மறக்கிறேன். ஆனாலும் அந்த காயத்தின் வடு அப்படியே என்னுள் உள்ளது. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எனது அம்மா, அப்பா மற்றும் மனைவிக்கு இறுதி அஞ்சலி கூட செலுத்த முடியாத சூழலுக்கு ஆளானேன் என்று தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.10.2023



## மேஷம்

இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.



## ரிஷபம்

இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## மிதுனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மன நிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.



## கடகம்

எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர் காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.



## சிம்மம்

இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.



## கன்னி

இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



## துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.



## விருச்சிகம்

இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.10.2023




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கொள்கைகளை பின் பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்த மான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணி களைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடு வதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும்.சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

